
தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்
TNPSC
GROUP 2 AND GROUP 4
SPECIAL
By ANANDHAVELAN G.
TNPSC

# தமிழ்

சீரிடம் காணின் எறிதற்குப் பட் டடை
நேரா நிரந்தவர் நட்பு.

கீழ்க்கண்ட கூற்றுகளில், இக்குறளின் கருத்தை மிகத் துல்லியமாக வெளிப்படுத்துவது எது?

A) நண்பரின் குற்றத்தைப் பொறுத்துக் கொள்வதே உண்மையான நட்பு

B) வெளிப்படையாக நட்புக் காட்டுபவர்கள் அனைவரும் நம்பத்தகுந்தவர்கள்

C) உள்ளத்தில் அன்பின்றி பழகுபவர் வாய்ப்பு கிடைத்தால் தீங்கு செய்வார்

D) பகைவரைவிட நண்பரே ஆபத்தானவர்

"பட்டடை" என்ற உவமையின் மூலம் வள்ளுவர் உணர்த்துவது என்ன?

A) நண்பனின் உறுதியான ஆதரவு

B) மறைந்து கிடக்கும் பகைமையின் ஆபத்து

C) செல்வம் தரும் நட்பின் பயன்

D) பழைய நட்பின் பெருமை

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

கீழ்க்கண்டவற்றுள் இக்குறளின் கருத்திற்கு முரணானது எது?

A) உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோரை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும்.

B) உண்மையற்ற நட்பு வாய்ப்பு கிடைத்தால் தீமை விளைவிக்கும்.

C) வெளிப்படையான நட்பே ஒருவரின் உண்மையான மனநிலையை அறியப் போதுமானது.

D) மனமொத்த நட்பிற்கும் போலி நட்பிற்கும் வேறுபாடு உண்டு.

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): இனத்தார்போல் நடிப்பவர்கள் உண்மையான உறவினராகக் கருதப்படக்கூடாது.

காரணம் (R): அவர்களின் நட்பு சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும் தன்மை உடையதாக இருக்கும்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

இக்குறளில் வள்ளுவர் எடுத்துரைக்கும் கருத்திற்கு மிகப் பொருத்தமானது எது?

A) குற்றம் மறைப்பதே நட்பு

B) பயன்கருதி ஏற்படும் உறவு நிலையானது

C) புறத்தோற்றத்தை வைத்து நட்பை மதிப்பிடக் கூடாது

D) பழைமையான நட்பு எப்போதும் சிறந்தது

"மகளிர் மனம்போல வேறுபடும்" என்ற உவமை மூலம் வள்ளுவர் சுட்டிக்காட்டுவது எது?

A) நட்பின் இனிமை

B) மனமாற்றம் கொண்ட போலி நட்பு

C) உறவின் நிலைத்தன்மை

D) அன்பின் உயர்வு

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது.

கீழ்க்கண்டவற்றுள் இக்குறளின் மையக் கருத்தைச் சரியாக வெளிப்படுத்துவது எது?

A) கல்வி மட்டுமே மனிதனை உயர்வாக்கும்

B) நூலறிவைக் காட்டிலும் மனத்தூய்மை சிறந்தது

C) செல்வம் பெற்றவரே சான்றோர் ஆவர்

D) கல்வி கற்றவர் தவறு செய்யமாட்டார்

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): பல நூல்களைக் கற்றிருந்தாலும் சிலரால் நல்வழியில் நடக்க முடியாது.

காரணம் (R): அவர்களின் உள்ளம் பகைமை உணர்வால் நிரம்பியிருக்கும்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

இக்குறளின் கருத்திற்கு மிக நெருக்கமானது எது?

A) கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு

B) ஒழுக்கம் விழுப்பம் தரலான்

C) கல்வியுடன் நற்குணமும் இணைந்திருக்க வேண்டும்

D) முயற்சி திருவினை ஆக்கும்

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

இக்குறளில் வள்ளுவர் எச்சரிக்கும் நபர்கள் யார்?

A) தவறு செய்த நண்பர்கள்

B) வெளிப்படையாகப் பகை கொள்பவர்கள்

C) முகத்தில் புன்னகையுடன் அகத்தில் தீமை கொண்டவர்கள்

D) அறிவில்லாதவர்கள்

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): இனிய முகப்போடு பழகுவோர் அனைவரும் நல்லெண்ணம் கொண்டவர்களாக இருக்க வேண்டியதில்லை.

காரணம் (R): சிலர் உள்ளத்தில் தீமையை மறைத்துக்கொண்டு வெளியில் அன்பாக நடந்து கொள்வர்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

"முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா" என்ற தொடரால் வள்ளுவர் வலியுறுத்துவது எது?

A) தோற்றத்தைக் கொண்டு ஒருவரின் குணத்தை முழுமையாக மதிப்பிடக் கூடாது

B) நண்பர்களிடம் எப்போதும் சிரித்துப் பேச வேண்டும்

C) பகைவரை நேரடியாக எதிர்க்க வேண்டும்

D) இன்சொல் பேசுவோர் அனைவரும் நம்பத்தகுந்தவர்கள்

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANKING

இக்குறளில் வள்ளுவர் அறிவுறுத்துவது எது?

A) செயலைவிடச் சொல்லுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

B) மனம் மற்றும் செயல் ஒத்துப்போகாதவர்களின் சொற்களை நம்பக் கூடாது

C) நண்பர்களின் கருத்தை எப்போதும் ஏற்க வேண்டும்

D) இனிமையாகப் பேசுவோரை மதிக்க வேண்டும்

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): மனத்துக்கும் செயலுக்கும் ஒற்றுமையில்லாதவர்களின் சொல் நம்பகமானதல்ல.

காரணம் (R): அவர்களின் சொற்களால் உண்மையை உறுதியாக அறிய முடியாது.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

இக்குறளின் கருத்திற்கு மிகவும் பொருத்தமானது எது?

A) சொல் வேறு செயல் வேறு என நடப்போரை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும்

B) நல்ல நண்பர்களின் அறிவுரையை ஏற்க வேண்டும்

C) கல்வியே மனிதனின் சிறந்த செல்வம்

D) முயற்சி வெற்றியைத் தரும்

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.

இக்குறளின் கருத்துப்படி, பகைவரின் சொற்களின் உண்மையான தன்மை எவ்வாறு அறியப்படுகிறது?

A) அவர்களின் கல்வியால்

B) அவர்களின் செல்வாக்கால்

C) சொற்களில் வெளிப்படும் உட்கருத்தால்

D) பிறர் கூறும் கருத்தால்

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): பகைவர் நண்பரைப் போல இனிமையாகப் பேசலாம்.

காரணம் (R): அவர்களின் சொற்களில் மறைந்திருக்கும் தீய நோக்கம் இறுதியில் வெளிப்படும்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

"நட்டார்போல் நல்லவை சொல்லினும்" என்ற தொடரின் மூலம் வள்ளுவர் வலியுறுத்துவது எது?

A) இனிமையான சொற்களை உடனே நம்பக்கூடாது

B) நண்பர்களின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும்

C) நல்ல சொற்களே நல்ல குணத்தைக் காட்டும்

D) பகைவரைத் தவிர அனைவரையும் நம்ப வேண்டும்

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

"வில்வணக்கம்" என்ற உவமையின் மூலம் வள்ளுவர் உணர்த்துவது எது?

A) பணிவின் சிறப்பு

B) வீரத்தின் மேன்மை

C) தீங்கு செய்ய முனையும் மறைமுக நோக்கம்

D) பகைவரின் அச்சம்

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): பகைவரின் பணிவான பேச்சை எளிதில் நம்பக்கூடாது.

காரணம் (R): அது தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் அமைந்திருக்கலாம்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

இக்குறளின் கருத்திற்கு மிகவும் பொருத்தமான பழமொழி எது?

A) அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு

B) ஆழம் தெரியாமல் காலை விடாதே

C) தேன் தடவிய நஞ்சை நம்பாதே

D) கற்றது கைமண் அளவு

SINCE 2013 We Shine Academy Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

இக்குறளில் வள்ளுவர் பகைவரின் எந்த இயல்பை எடுத்துரைக்கிறார்?

A) வெளிப்படையான கோபம்

B) மறைந்திருக்கும் வஞ்சக நோக்கம்

C) வீரமிக்க செயல்

D) நட்பின் நிலைத்தன்மை

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): பகைவரின் பணிவும் கண்ணீரும் உண்மையானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

காரணம் (R): அவர்களின் உள்ளத்தில் தீங்கு செய்யும் எண்ணம் மறைந்திருக்கலாம்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

"அழுதகண் ணீரும் அனைத்து" என்பதன் மூலம் வள்ளுவர் வலியுறுத்துவது எது?

A) துன்பத்தை வெளிப்படுத்துதல்

B) இரக்க உணர்வின் மேன்மை

C) உணர்ச்சிகளை மட்டும் வைத்து ஒருவரை நம்பக் கூடாது

D) கண்ணீரே உண்மையின் அடையாளம்

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

இக்குறளின் கருத்துப்படி, போலி நட்பைக் கையாள்வதற்கான சிறந்த அணுகுமுறை எது?

A) அவர்களை முழுமையாக நம்புதல்

B) பகையை வெளிப்படையாக அறிவித்தல்

C) சூழ்நிலையை உணர்ந்து எச்சரிக்கையுடன் நடத்தல்

D) அவர்களின் தவறுகளைப் பொறுத்துக்கொள்ளல்

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): வெளியில் நட்பாக நடந்து கொண்டு உள்ளத்தில் இகழ்பவர்களை எளிதில் நம்பக்கூடாது.

காரணம் (R): அவர்களின் நட்பு உண்மையான அன்பின் அடிப்படையில் அமைந்ததல்ல.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

"நகச்செய்து நட்பினுட் சாப்புல்லற் பாற்று" என்பதன் மூலம் வள்ளுவர் வலியுறுத்துவது எது?

A) பகைவரிடம் உடனடியாக பழிவாங்க வேண்டும்

B) வஞ்சக நட்பை உணர்ந்து அதனால் பாதிக்கப்படாமல் தற்காத்துக் கொள்ள வேண்டும்

C) அனைவரிடமும் சமமாக பழக வேண்டும்

D) நண்பர்களின் குற்றத்தை மறைக்க வேண்டும்

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு அகநட்பு ஒரீஇ விடல்.

இக்குறளில் வள்ளுவர் எடுத்துரைக்கும் அரசியல் நெறி எது?

A) பகைவரை எப்போதும் நம்புதல்

B) சூழ்நிலைக்கேற்ப வெளிப்படையான நட்புறவை மேற்கொள்ளுதல்

C) பகைவருடன் நிரந்தர நட்பு கொள்ளுதல்

D) பகையை உடனடியாக வெளிப்படுத்துதல்

Guiding you to get through
TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க:

கூற்று (A): சில சூழ்நிலைகளில் பகைவருடன் நட்புறவு பேண வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

காரணம் (R): அத்தகைய நட்பு உள்ளப்பூர்வமானதாக இல்லாமல் சூழ்நிலை சார்ந்ததாக அமையும்.

A) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம்

B) A மற்றும் R சரி; R என்பது A-க்கான சரியான விளக்கம் அல்ல

C) A சரி; R தவறு

D) A தவறு; R சரி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

"முகநட்டு அகநட் பொரீஇ விடல்" என்பதன் மூலம் வள்ளுவர் வலியுறுத்துவது எது?

A) பகைவரை முழுமையாக நம்புதல்

B) நட்பை நிலைநிறுத்துதல்

C) தேவைக்கேற்ப வெளிப்படையான உறவை மட்டும் பேணி பின்னர் விலகுதல்

D) பகையை மறந்து உண்மையான நட்பு கொள்ளுதல்




www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344